76—

பணிபுரியும் மகளிர் விடுதி

***842—திரு. எம். இராமச்சந்திரன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாட்டில் பணி புரியும் மகளிர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளை மாளிகையே வியந்து பார்க்கும் வண்ணம் மகளிருக்கு சமூகப் பொருளாதார அரசியல் உயர்வு தந்து, அகில மகளிர் உள்ளங்களில் உயர்ந்து நின்று, (மேசையைத் தட்டும் ஒலி) உலகிற்கே வழிகாட்டும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமூக நலத் துறையின்கீழ் சென்னை, கடலூர், புதுக்கோட்டை, மதுரை, திருச்சி, தருமபுரி மற்றும் தூத்துக்குடி ஆகிய 7 மாவட்டங்களில் 8 அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. தற்பொழுது தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டம் உள்ளிட்ட 13 மாவட்டங்களில், 20 அரசு பணி புரியும் மகளிர் விடுதிகள் துவங்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. எனவே, தஞ்சாவூரில் ஏற்கெனவே அரசு பணி புரியும் மகளிர் விடுதி இருப்பதால், ஒரத்தநாட்டில் மற்றோர் அரசு பணி புரியும் மகளிர் விடுதி அமைக்க அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தஞ்சாவூரில் பணிபுரியும் பெண்கள் விடுதி இருப்பதாக குறிப்பிட்டார்கள்.*

இருப்பது உண்மை. என் கேள்வியின் நோக்கம், ஒரத்தநாட்டில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றும், கல்வியியல் கல்லூரி ஒன்றும், கால்நடை பயிற்சிக் கல்லூரி ஒன்றும், நில அளவையாளர் கல்லூரி ஒன்றும் என 4 கல்லூரிகள் இயங்குகின்றன. ஒரத்தநாட்டைச் சுற்றி ஏராளமான கிராமப் பகுதிகள் இருக்கின்ற காரணத்தால், பெண்கள் அங்கிருந்து தஞ்சாவூருக்கு வந்து தங்கி, அங்குள்ள கல்லூரிகளுக்குச் செல்வது சிரமமாக இருக்கிறது. எனவே, ஒரத்தநாட்டில் ஒரு பெண்கள் விடுதி அமைக்க அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணி புரியும் பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து வருவதைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அறிவிப்பின்படி, 1,000 பணிபுரிகிற மகளிர் பயன்பெறத் தக்கவகையில், கோயம்புத்தூர், திருப்பூர், சேலம், வேலூர், திருவள்ளூர், விழுப்புரம், பெரம்பலூர், திருச்சி, தஞ்சாவூர், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி உள்ளிட்ட 11 மாவட்டங்களில் தலா ஒரு விடுதியும், சென்னையில் 6 பணிபுரியும் மகளிர் விடுதிகளும், காஞ்சிபுரத்தில் 3 பணிபுரியும் மகளிர் விடுதிகளும், ஆக மொத்தம் 20 பணிபுரியும் மகளிர் அரசு விடுதிகள் துவங்க, 23 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவினம் அனுமதித்து, அரசாணை 24–2–2013 அன்று வெளியிடப்பட்டு, பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, 2013–2014 ஆம் ஆண்டு அறிவித்த அறிவிப்பின்படி, தஞ்சாவூரில் ஏற்கெனவே 50 பெண்கள் அனுமதிக்கப்பட்ட அந்த அரசு விடுதியில் மேலும் பெண்களைச் சேர்த்துக்கொள்ளும் அளவில் இன்னும் இடம் இருக்கின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.